02.01.2025

E.P.No.48/2018

PW1 மருதமுத்து, த/பெ. வெள்ளைசாமி

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 02.01.2025.

<u>குறுக்கு விசாரணை :</u> (1ம் எதிர்மனுதாரர் தரப்பில்)

1. நான் 2017ம் வருடம் முதல் மனுதாரர் நிறுவனத்தில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. மனுவின் சங்கதிகள் மற்றும் பிரமாணவாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையானவை படித்து பார்த்து உறுதி செய்துக்கொண்டேன்.

3. இரண்டு சர்வே எண்கள் 390/4 மற்றும் 390/7 ஐ பொறுத்து நான் மனு தாக்கல் செய்துள்ளேன்.

4. கடந்த 11.11.2018ம் தேதி 4ம் எதிர்மனுதாரர் எங்கள் நிறுவனத்திற்கு செல்லும் மின் இணைப்பை துண்டிப்பதாக கூறி அறிவிப்பு அனுப்பியதாக பிரமாணவாக்குமூலத்தில் நான் கூறியுள்ளேனா என்றால் இல்லை. 19.11.2022ம் தேதி எனக்கு 4ம் எதிர்மனுதாரர் அலுவலகத்தில் இருந்து போன் மூலமாக தகவல் வந்ததது.

5. மனு தபசில் சொத்தில் ஒரு காற்றாலை மட்டுமே உள்ளது. அந்த காற்றாலை மற்றும் பாதை சர்வே எண்கள் 390/4 மற்றும் 390/7ல் அமைந்துள்ளது.

6. ம.சா.ஆ.1 ஆவணத்தில் காற்றாலை இருப்பதற்கான விவரம் துலங்குமா என்றால், துலங்காது. ஆனால் காற்றாலை உள்ளது. கிரைய ஆவணம் என்பதால் காற்றாலை காண்பிக்கபடவில்லை.

7. ம.சா.ஆ.2 ஆவணத்தின்படி சர்வே எண்.390/7ல் காற்றாலை உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. நான் மனுதாரர் மீது மாட்சிமிகு சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.1/2019 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

9. அ.வ.எண்.1/2019 வழக்கு கடந்த 22.07.2024 ல் தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

10. மேற்படி வழக்கு தள்ளுபடியானதை என் வழக்கறிஞர் எனக்கு தகவல் சொன்னரா என்றால் இல்லை.

11. கடந்த 17.02.2017 ம் தேதி அசல் வழக்கில் 1 ம் எதிர்மனுதாரருக்கு ஆதரவாக தபசில் சொத்தைப்பொறுத்து தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் எனக்கு அதுப்பற்றி தெரியாது.

12. அ.வ.53/2012 வழக்கில் தீர்ப்பை எதிர்த்து தரப்பினர் எவரும் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் எனக்கு அதுப்பற்றி தெரியாது.

13. 4 ம் எதிர்மனுதாரருடன் சர்வே எண்கள் 390/2 மற்றும் 390/7 ஐ பொறுத்துதான் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல.

14. 1 ம் எதிர்மனுதாரருக்கு ஆதரவாக ஏற்கனவே நீ.ம.எண்.48/2018 ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் எனக்கு அதுப்பற்றி தெரியாது. அந்த உத்தரவின் பெயரிலும் தரப்பினர் எவரும் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் எனக்கு அதுப்பற்றி தெரியாது.

15. கடந்த 19.11.2022 ல் 4 ம் எதிர்மனுதாரர் நீதிமன்ற உத்தரவை அனுசரித்து மின்இணைப்பை துண்டித்துவிட்டார் என்றால் சரிதான். (சாட்சி தற்போது துண்டிக்க போவதாக மட்டுமே கூறியுள்ளதாக பதில் அளித்தார். ) நான் வழக்கிற்காக தவறாக கூறுகிறேன் என்றும், 18.11.2022 ம் தேதி நீதிமன்ற அமீனா மனு சொத்திற்கு செல்லும் மின் இணைப்பை துண்டித்துவிட்டார் என்றால் சரியல்ல.

16. என் பிரமாணவாக்குமூலத்தில் பத்தி எண். 5ல் அதன் பேரில் இருந்து 19.11.2022ம் தேதியில் மேற்படி காற்றாலைக்கு வழங்கப்பட்டிருந்த மின் இணைப்பினை துண்டித்துவிட்டனர் எனக் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

17. மின் இணைப்பு துண்டிக்கப்பட்டதலிருந்து 3 மாதமாக காற்றாலை இயங்கவில்லை என்றால் சரியல்ல காற்றாலை இயங்குகிறது.

18. தற்போது மனு சொத்தில் அமைந்துள்ள காற்றாலைக்கு மின் இணைப்பு செல்வதற்காகவும் அந்த மின் இணைப்பு நாளதுவரை இயங்குவதற்கு மின் வாரியத்திலிருந்து கணக்கிடப்படும் மின் பதிவு அட்டையும் உள்ளது. அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன் . இந்த வழக்கிற்காக தவறாக கூறுகிறேன் என்றும், நீதிமன்ற உத்தரவின் படி மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு தற்போது நீதிமன்ற உத்தரவு இல்லாமல் சட்ட விரோதமாக மின் இணைப்பு பெற்று காற்றாலை இயக்கப்படுகிறது என்றால் சரியல்ல.

19. நீதிமன்ற ஆணையர் அசல் வழக்கில் தாக்கல் செய்த அறிக்கையின்படி சர்வே எண்.390/4ல் மட்டுமே காற்றாலை உள்ளது என்றும், சர்வே எண்.390/7ல் எந்த காற்றாலையும் இல்லை என கூறியதால் மனுதாரருக்கு ஆதரவாக அசல் வழக்கில் தீர்ப்பு பகரப்பட்டது என்றால் சரியல்ல.

20. மனுதாரர் தீர்ப்பின் பலனை அடையக்கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் நான் தவறான விவரங்களை நீதிமன்றத்தில் கூறி நீதிமன்றத்தின் நேரத்தை வீண்ணடிக்கிறேன் என்றால் சரியல்ல.

21. அசல் வழக்கின் தீர்ப்பு நாளதுவரை நிறைவேற்றும் வகையில் அமலில் உள்ளதால் நான் தவறான விவரங்களை கூறி தாக்கல் செய்த இந்த மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

22. நான் தாக்கல் செய்த ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் அனைத்தும் அசல் வழக்கின் தீர்ப்பாணைக்கு பிறகு உள்ளதால் மேற்படி ஆவணங்கள் 1ம் எதிர்மனுதாரரை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

23. நான் மனு தாக்கல் செய்வதற்கு அதிகாரம் இல்லை என்றும், மனுவில் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

ஒம்/—J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி